*57*

# “என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்”

## [18:4, 5, 8, 10]

*பிரிந்து வருதலுக்கான அழைப்பானது தேவனுடைய மீட்பின் நடவடிக்கையின் வரலாறு முழுவதிலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அடையாளப்படுத்தியுள்ளது. ஆபிராமிடத்தில் “நீ உன் தேசத்தையும் … விட்டுப் புறப்பட்டு, நான் உனக்கு காண்பிக்கும் தேசத்துக்குப்போ” ([ஆதியாகமம்] 12:1) என்ற தேவனுடைய கட்டளையில் யூத இனம் தனது தொடக்கத்தைக் கொண்டிருந்தது.[1]*

*“வெளியே வருவதற்கான” அறைகூவல் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது: தூதர்கள் லோத்துவினிடத்தில் அவர் தமது குடும்பத்தைக் கூட்டிக்கொண்டு சோதோமை விட்டு ஓடிப்போகும்படி கூறினர் (ஆதியாகமம் 19:12, 13). மோசே இஸ்ரவேல் மக்களிடத்தில், கோராகு மற்றும் அவனது சக கலகக்காரர்களின் கூடாரங்களை விட்டு விலகும்படியாகவும், “… நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, … அவர்களுக்கு உண்டானவைகளில் ஒன்றையும் தொடாதிருங்கள்” என்றும் கட்டளையிட்டார் (எண்ணாகமம் 16:26). ஏசாயா இஸ்ரவேல் மக்களுக்கு, “பாபிலோனிலிருந்து புறப்படுங்கள்”; “புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம்விட்டுப் போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்” என்று ஆணையிட்டார் (ஏசாயா 48:20; 52:11அ). எரேமியாவும் இதையே கூறினார்: “நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு, அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்” (எரேமியா 51:6அ). பிரிந்து வருதலுக்கான கூக்குரலைப் பவுல் புதிய ஏற்பாட்டில் எதிரொலித்தார்: “ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, …” (2 கொரிந்தியர் 6:17, 18அ).*

*இவ்விதமாக, வெளிப்படுத்தின விசேஷம் 18ல் தூதன் பாபிலோனின் அழிவை முன்னெதிர்பார்த்தபோது, கொடுத்த கட்டளையானது நன்கு பழக்கமான ஒன்றாக இருந்தது:*

> *பின்பு வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு*

*உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார் (வசனங்கள் 4, 5).*

*லியோன் மோரிஸ் என்பவர் இந்த வசனங்களின்மீது விளக்கவுரை யளிக்கையில், பின்வருமாறு எழுதினார்: "தேவனுடைய மக்களுக்கான அழைப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிறது ... ஒரு கருத்தில் இந்த வேண்டுகோள் இம்முழு அதிகாரத்திற்கும் திறவுகோல் போன்றதாக உள்ளது."[2] வலிவார்ந்த இந்தப் புத்திமதியைச் சிறப்பாகப் புரிந்து கொள்வதற்கு நமக்கு உதவும்படி, நாம் இதைப் பற்றிப் பலகேள்விகளைக் கேட்போம்.*

## *என்ன?*

*முதலாவது, "வெளியே வாருங்கள்" என்ற இந்த அறைகூவலானது மிகச்சரியாக எதனை பயனாக ஏற்படுத்துகிறது? குறிப்பிட்ட உதாரணங்கள் சிலவற்றில், அறைகூவலானது ஒரு குறிப்பிட்ட இடத்தை உண்மையிலேயே கைவிடவேண்டியதாக இருந்தது (ஆதியாகமம் 12:1, 4ஐக் காணவும்). மிகவும் அடிக்கடி, தேவனுடைய மக்களுக்கான கட்டளையானது, ஒரு இடத்துடன் சேர்த்து அழிக்கப்படாதபடிக்கு அதை விட்டு வெளியேறுவதற்கானதாக இருந்தது. லோத்துவின் விஷயத்தில், அவரும் அவரது குடும்பத்தாரும் தப்பி ஓடாதிருந்தால், அவர்கள் சோதோம் கொமோராவின் முடிவில் பங்கடைந்து இருப்பார்கள் (ஆதியாகமம் 19:12, 13). கோராகுவின்மீதும் அவனது சக கலகக்காரர்களின்மீதும் தேவனுடைய கோபம் விழுந்தபோது, அந்தச் சூழ்ச்சிக்காரர்களுடைய கூடாரங்களில் இருந்தவர்களும் பூமியால் விழுங்கப்பட்டனர் (எண்ணாகமம் 6:23-34).*

*இவ்வகையான "வெளிவருதலின்" மாதிரிக்கான புதிய ஏற்பாட்டின் உதாரணம், எருசலேமைக் குறித்து இயேசு தமது சீஷர்களுக்குக் கூறிய வார்த்தைகளில் காணப்படமுடியும்: "மேலும் பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே; வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்; அது நிற்கத்தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது [இது ரோமச் சேனைகள் நகரத்தைச் சூழ்ந்திருத்தல் பற்றிய இறைவெளிப்பாட்டுக் குறிப்பாகும்], யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்" (மாற்கு 13:14). எருசலேமின் வீழ்ச்சியின்போது, கிறிஸ்தவர்கள் தங்கள் நகரத்தின் முடிவில் இருந்து தப்பிப்பதற்காக பெல்லா என்ற இடத்திற்குத் தப்பியோடியதாக வரலாற்றாளர்கள் நமக்குக் கூறுகின்றனர்.*

*ஆகையால், வெளிப்படுத்தின விசேஷம் 18:4ன் வேண்டுகோள், கிறிஸ்தவர்கள் ரோமாபுரி நகரத்தைவிட்டு இயல்பான/பௌதீக முறையில் வெளியேற வேண்டியதன் அவசியத்தின் கருத்தை உள்ளடக்கியிருந்தது. அதன் இழுவையினால் தாங்கள் உள்ளிழுக்கப்படுவதாக - அல்லது அந்த நகரம் அழிபடுவதாயிருப்பதாக - அவர்கள் தங்களைக் கண்டறியும்போது*

அது வெளியேற வேண்டிய வேளையாயிருந்தது.

இருப்பினும், "வெளியே வாருங்கள்" என்ற கட்டளையானது அடிக்கடி, உள்ளூரினால் எதிரான வகையில் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருத்தலை மறுத்தல் என்று அர்த்தப்பட்டது. இதுவே ஏசாயா மற்றும் எரேமியா ஆகியோர் பாபிலோனை விட்டு வெளியே வரும்படி (இஸ்ரவேல் மக்களுக்கு) விடுத்த வேண்டுகோள்களின் கருத்தாயிருந்தது: பாபிலோனுக்குக் கூட்டிச் செல்லப்பட்டிருந்தவர்களில் சிலர் அங்கே வேர்பிடிக்கத் தொடங்கி யிருந்தனர். அவர்கள், தேவனற்ற மக்களின் வழிகளில் பங்கேற்கத் தொடங்கியிருந்தனர். அவர்கள் கொள்கைகள் நழுவிக்கொண்டிருந்தன; உலகத்தன்மையானது அவர்களினுள் அமைந்து கொண்டிருந்தது; அவர்கள் "வாழு வாழவிடு" என்பதில் மனவிருப்பம் கொண்டவர்களாய் இருந்தனர்.[3] இவ்விதமாக, அவர்கள் ''வெளியே வரவேண்டும்'' என்று அந்தத் தீர்க்கதரிசிகள் கதறினர் - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், வாழ்விற்கான பாபிலோனிய வழிகளினால் அவர்கள் தூய்மைக்கேடு அடைந்திருக்கக்கூடாது.

இதுவே 2 கொரிந்தியர் 6ல் பவுலின் கருத்துத் தாக்கமாக இருந்தது. அவர், கொரிந்துவில் இருந்த கிறிஸ்தவர்களை, அவர்கள் விட்டுவந்த பாவம் நிறைந்த வாழ்வுப் பாணிகளுக்குப் பின்னிழுத்துச் செல்லும் சிக்கவைக்கும் கூட்டுறவுகளைத் தவிர்க்கும்படி வற்புறுத்தினார்:

> அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே. ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது, நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார் (2 கொரிந்தியர் 6:14-17).

இது வெளிப்படுத்தின விசேஷம் 18:4ன் கருத்துத் தாக்கமாகவும் உள்ளது. கிறிஸ்தவர்கள் உணர்வுப்பூர்வமாக, உளவியல் ரீதியாக, மற்றும் ஆவிக்குரிய வகையில், ''பாபிலோனை விட்டு வெளிவர'' வேண்டியவர்களாய் இருந்தனர். வில்லியம் ஹென்ரிக்சென் என்பவர், பாபிலோனை விட்டு வெளிவருதல் என்பது ''அதன் பாவங்களுடன் ஐக்கியம் கொள்ளாதிருத்தல், அதன் மயக்குதல்கள் மற்றும் கவர்ச்சிகளினால் வலையில் அகப்படாதிருத்தல்'' என்று அர்த்தப்படுகிறது என்பதாக கூறினார்.[4] வில்லியம் பார்க்லே என்பவர், "பாபிலோனை விட்டு நீங்குதல்" என்பது ''கிறிஸ்தவர்கள் உலகத்தில் இருந்து பிரிந்திருக்க வேண்டிய

அவசியத்தை" விவரிக்கிறது என்று கருத்துத் தெரிவித்தார்.[5]

"உலகத்தில் இருந்து பிரிந்திருத்தல்" அல்லது "உலகத்தில் இருந்து தனித்திருத்தல்" என்பது நாம், அடுத்த விண்கலத்தில் ஏறி இப்பூமியை விட்டுச் சென்றுவிட வேண்டும் என்றோ அல்லது நாம் ஒரு குருமடத்தில் சென்று ஒளிந்துகொள்ள வேண்டும் என்றோ அர்த்தப்படுவதில்லை. இயேசு, தமது சீஷர்கள் இந்த உலகத்தில் இருக்க வேண்டும் ஆனால் "உலகத்தாராய் இருக்கக் கூடாது" என்று வலியுறுத்தினார் (யோவான் 17:14-18). இதற்குப் பதிலாக, "பிரிந்திருத்தல்" என்பது, இந்த உலகமானது நமது மதிப்பீடுகள் மற்றும் தர அளவைகள் ஆகியவற்றை நமக்குக் கட்டளையிட நாம் அனுமதிக்கக் கூடாது என்று அர்த்தப்படுகிறது. பார்க்ளே என்பவர், "இது உலகத்தில் இருந்து ஒய்வுபெறுதல் என்பது பற்றிய கேள்வியல்ல; இது இந்த உலகத்திற்குள்ளாகவே மாறுபட்ட வகையில் வாழுதல் பற்றிய கேள்வியாக உள்ளது" என்று உற்றுக்கவனித்துள்ளார்.[6] மெரில் C. டென்னீ என்பவர், "தேவனுடைய அழைப்பானது விசுவாசிகள் மற்றவர்களுடன் இணைவு கொண்டிருக்க போலிப்பகட்டுடன் மறுத்துவிட வேண்டும் என்றோ அல்லது அவர்கள் 'உன்னைவிட நான் பரிசுத்தவான்' என்ற எண்ணப்போக்கை யூகித்துக் கொள்ள வேண்டும் என்றோ அர்த்தப்படுவதில்லை. அவர்கள் தனித்தன்மை வாய்ந்தவர்களாய் இருக்க வேண்டும் என்றே அவர் நோக்கம் கொண்டுள்ளார்" என்று கூறினார்.[7]

புதிய ஏற்பாட்டில் மிகத் தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ளது ஏதாவது இருக்கும் என்றால் அது கிறிஸ்தவர்கள் பிரிந்திருக்கும் நிலையில் தனித்தன்மை வாய்ந்தவர்களாய் இருக்க வேண்டும் என்பதுதான். வெளிப்படுத்தின விசேஷம் உட்பட, புதிய ஏற்பாட்டில், ஒரு விசுவாசிக்கு "பரிசுத்தவான்"[8] என்ற பட்டப்பெயர் மிகச் சாதாரணமாக உள்ளது, இது ஒரு பரிசுத்த நோக்கத்திற்காக "பிரித்து வைக்கப்பட்ட" ஒருவரைக் குறிக்கிறது.[9] "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, இயேசுவுடன் ஒரு புதிய உறவுக்கென்று உலகத்திலிருந்து "வெளியே அழைக்கப்பட்ட"வர்களைக் குறிக்கிறது.[10] யாக்கோபு, "... உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" என்று தெளிவாக எழுதினார் (யாக்கோபு 4:4). டென்னீ என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> ஒரு கிறிஸ்தவர், தமது ஆர்வங்கள், பொழுதுபோக்குப் பணிகள் மற்றும் இலக்குகள் ஆகியவற்றிற்கும் கிறிஸ்தவரல்லாதவர்களின் மேற்கண்ட விஷயங்களுக்கும் இடையில் வேறுபாட்டைப் பகுத்தறியக் கூடியவராக இருக்க வேண்டும் ... .
>
> ... உலகம் [நமது] எஜமானன் அல்ல, ஆனால் அது [நமது] வேலையாளாக உள்ளது; இது நாம் பற்றிக் கொண்டிருக்க வேண்டிய ஒரு தர அளவையாக அல்ல, ஆனால், ஒரு சூழ்நிலையாகவே உள்ளது; இது ஒரு நண்பனாக அல்ல ஆனால் ஒரு விரோதியாகவே உள்ளது. ஒரு கிறிஸ்தவர், உலகத்தின் கொள்கைகள் மற்றும் பயன்பாடுகளுக்கு அல்ல, ஆனால் அதற்கு மாறாக, உலகத்திற்குச் சாட்சியாக

இருப்பதையே நாடவேண்டும்.[11]

பவுல், "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் ... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று அறைகூவல் விடுத்தார் (ரோமர் 12:2).

நாம், உலகத்தின் மதிப்பீட்டு முறைமை, அதன் தர அளவைகள், மற்றும் அதன் கண்ணோக்கக் கருத்து ஆகியவற்றில் இருந்து "வெளியே வர" வேண்டும். நாம் "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்பதால் (1 கொரிந்தியர் 15:33), அவற்றைத் தவிர்க்க வேண்டும். நாம், இந்த உலகத்தில் ஏராளமாய் நிறைந்து இருக்கிற கள்ளப் போதனைகளில் இருந்து "வெளியே வர" வேண்டும் (ரோமர் 16:17, 18; 2 யோவான் 9-11).

இருப்பினும், "வெளியே வருதல்" என்ற கட்டளையானது முற்றிலும் எதிர்மறையானதாக இருப்பது இல்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். நாம் தேவனிடத்தில் வருவதற்காக பாபிலோனை விட்டு "வெளியே வர" வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (எரேமியா 3:22ஐக் காணவும்). கிறிஸ்தவர்கள், "பாபிலோனுக்கு உரியவர்கள் அல்ல, ஆனால் தேவனுக்கு உரியவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தவறானவைகளுக்கு மாறாக சத்தியத்திற்கும், நெறிபிறழ்ந்த நிலைக்கு அல்ல, ஆனால் தூய்மைக்கும், சோம்பலூட்டும் வசதிக்கல்ல ஆனால் தேவனுடைய சித்தத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்."[12] பழைய பாடல் ஒன்றின் இரண்டாவது சரணம், நமது வாழ்வில் தேவனுடைய விருப்பம் என்ன என்பதை விளக்கப்படுத்துகிறது:

> உலகத்தின் பொன் அங்காடியை வணங்கும்
> வீணான ஆராதனையிலிருந்து இயேசு நம்மை அழைக்கின்றார்;
> நம்மைத் தடைசெய்யும் ஒவ்வொரு விக்கிரகத்தில் இருந்தும்
> விலகும்படி, "கிறிஸ்தவரே, என்னை அதிகம் அன்புகூரும்"
> என்று கூறி அழைக்கின்றார்.[13]

"அவர்கள் நடுவிலிருந்து வெளிவந்து பிரிந்திருக்கும்படிக்கு" கூறப்பட்ட கர்த்தருடைய கட்டளைகளுக்கு நாம் செவிகொடுத்தால், அவர், "நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள்" என்று வாக்குத்தத்தம் செய்துள்ளார் (2 கொரிந்தியர் 6:17, 18).

பாபிலோனில் குடியிருப்பவராய் இருப்பதா அல்லது பரலோகத்தின் குடிமகனாய் இருப்பதா என்பதை ஒவ்வொரு நபரும் தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.[14]

## ஏன்?

"யோவானின் வாசகர்கள் பாபிலோனை விட்டு 'வெளியே வருதல்' என்பது ஏன் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது?" என்பது

இரண்டாவது கேள்வியாக உள்ளது.[15] எண்ணற்ற காரணங்களைக் குறிப்பிட முடியும், ஆனாலும் நமது வசனப்பகுதியில் இரண்டு காரணங்கள் தரப்பட்டுள்ளன: முதலாவது, தூதன் அவர்களிடம், "நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமல் இருக்கும்படிக்கு'' நகரத்தை விட்டு வெளியே வரும்படி கூறினார். நாம் ஒப்புக்கொள்ள விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், பாவம் என்பது குறிப்பிட்ட ஒரு வசீகரத்தன்மையைக் கொண்டுள்ளது. மகாவேசியைப் பற்றிப் பேசும்போது, மிகாயீல் வில்காக் என்பவர், நாம் அவளது இணங்கவைக்கும் தன்மையைக் குறைவாக மதிப்பிடத் துணியக்கூடாது என்று கூறினார்:

> 17:4ன் பகட்டுத்தன்மையைக் கண்டு நாம் - "எவ்வளவு கீழ்த்தரம், எவ்வளவு போலிப்பகட்டு!'' என்று பதற்றத்துடன் கூறலாம் - ஏனென்றால் அவ்வாறு கூறும்படிக்கே நம்மிடம் எதிர்பார்க்கப்படுகிறது என்று நாம் நினைக்கின்றோம். ஆனால் நடைமுறையில், அன்றாட வாழ்வில், முத்துக்களும் இரத்தாம்பரமும் மற்றும் பொன்னால் ஆன கிண்ணங்களும் பயபக்திக்குரிய கவர்ச்சியைக் கொண்டுள்ளது.[16]

நீங்களும் நானும் உலகத்தின் சங்கொலி அழைப்பிற்கு இணங்கும்படி சோதிக்கப்படுகின்றோம் என்றால், முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்கள் இருமடங்காகத் சோதிக்கப்பட்டிருக்க வேண்டும். "துன்புறுத்தப்பட்ட சபையானது, வெறுப்புக்குரிய சூழ்நிலையில் வாழும் இறுக்கத்தைச் சுலபமாக்கிக் கொள்ளும்படிக்கு, உலகத்தன்மையுடன் ஒத்துப்போகும்படிக்கான சோதனையை எப்போதுமே எதிர் கொண்டிருந்தது.''[17] மோரீஸ் என்பவர், ''தேவனுடைய மக்கள் துன்புறுத்தப்பட்டு, நொறுக்கப்பட்டு இருந்ததுபோன்றே, அவர்கள் நகரத்தின் நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளும்படி மிகவும் சோதிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போது அவர்களின் உபத்திரவம் ஒழிந்திருப்பதோடு, நகரமானது அவர்களை செல்வந்தர்களாகவும் ஆறுதல் நிறைந்தவர்களாகவும் ஆக்கியிருக்கும்."[18]

யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களில் சிலர், ''பாபிலோனின் குற்றங்களுக்கு உடன்படத் தயாராயிருந்திருக்க'' சாத்தியக்கூறு உள்ளது, அவ்வாறு நடந்தும் இருக்கலாம்.[19] அவர்கள் ஈடுபடும் விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டியது வலிவார்ந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர்கள் பாபிலோனின் பாவங்களில் ஐக்கியம் கொண்டிருந்தால், தேவனுடைய மக்கள் என்று அழைக்கப்படும் உரிமையைத் துறந்திருக்க வேண்டும். பவுல், "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல்" என்று கூறினார் (எபேசியர் 5:11அ), மற்றும் அவர் ''மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன்படாதே" என்றும் கூறினார் (1 தீமோத்தேயு 5:22ஆ; NIV).

பாபுலோனின் பாவங்களில் பங்கேற்கும்போது, அதன் அழிவிலும் அவர்கள் பங்கேற்பார்கள் என்பது அதன் இன்னொரு விளைவாய் இருந்தது: ''வெளியே வரும்படி'' கூறப்பட்டதற்குத் தரப்பட்ட

இரண்டாவது காரணம், "அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமல் இருக்கும்படிக்கு'' என்பதாகும். இந்த வாதைகளை 8ம் வசனம் வரைக்குறிப்பிடுகிறது: "ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்.'' ரோமாபுரியின் முடிவு பற்றி 18ம் அதிகாரம் சந்தேகம் எதையும் விட்டுவைப்பதில்லை. அது அழிக்கப்படும். அதே முடிவைத் தவிர்ப்பதற்கு கிறிஸ்தவர்கள் ரோமாபுரியின் மயக்கும் கவர்ச்சியை எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது.

இன்றைய நாட்களில் உலகம் இன்னமும் தனது "மாயாஜாலங்களை" செய்கிறது; நிலையற்றவற்றை நிரந்தரமானவைகளாகத் தோன்றும்படி ஆக்குகிறது, அற்பமானவற்றை அத்தியாவசியமானவைகளாக்குகிறது, மற்றும் கேவலமானவற்றைத் தீங்கற்றவைகளாய்க் காணப்படும்படி செயல்படுகிறது. நான் ஒப்புக்கொள்ள விரும்புவதைக் காட்டிலும் அதிகமாக உலகமானது என் வாழ்வில் செல்வாக்கைக் கொண்டுள்ளது: ஒரு காலத்தில் இருந்தது போல் இப்போது நான் பாவத்தைக்குறித்து அவ்வளவு அதிகமாக அதிர்ச்சி அடைவதில்லை: பாவிகளை எச்சரிப்பதில் நான் ஒரு காலத்தில் வெளிப்படையாய்ப் பேசியதுபோல் இப்போது பேசுவதில்லை; நான் "விஷயங்களுடன்" இணைவுபட்டிருக்கிறேன். ரோமாபுரி அழிவை நோக்கி முன்சென்றது போலவே, ''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்" (1 யோவான் 2:17) என்பதை நான் நினைவில் கொண்டிருக்க வேண்டும் - மற்றும் நீங்களும் இதை நினைவில் கொண்டிருக்க வேண்டும். வெளிப்படுத்தின விசேஷம் 18ம் அதிகாரமானது, நாம் கவனிக்க வேண்டிய ஒரு அறிவிப்பை ஏற்படுத்துகிறது. ஹென்ரிக்ஸென் என்பவர் பின்வருமாறு வலியுறுத்தினார்,

> ... சந்தோஷத்தில் பைத்தியம் கொண்ட, முரட்டுத்தனமான உலகம், அதன் மயக்குகிற சகலவிதமான ஆடம்பரங்கள் மற்றும் சந்தோஷங்கள் ஆகியவற்றுடன், அதன் கிறிஸ்தவத்திற்கு எதிரான தத்துவம் மற்றும் கலாச்சாரத்துடன், அந்த திரளான மக்கள்தொகை தேவனைப் புறக்கணித்து, தங்கள் மாம்ச இச்சைகள் மற்றும் மனதின் விருப்பத்தின்படியும் வாழ்ந்திருக்கும் நிலையில் அழியும்.[20]

வெளிப்படுத்தின விசேஷத்தை முதன்முதலாக வாசித்தவர்களுக்கு நிச்சயமாகவே அவசியமாய் இருந்தபடி எனக்கும் நமது வேதவசனத்தில் இரட்டை எச்சரிக்கை அவசியமாகிறது: நான் தேவனுடைய தயவை மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டும் என்றால், நான் ''வெளியே வந்து பிரிந்திருக்க வேண்டும்.'' நான் தேவனுடைய கோபத்தைத் தவிர்க்க வேண்டும் என்றால், பாவத்தின் வலைக்குள் மயங்கிவிழ நான் என்னை அனு மதிக்கக் கூடாது.

இந்த அறைகூவலை நான் உணர்ந்தறிகையில், சங்கீதக்காரனுடன் சேர்ந்து, "தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும்; என் தேவனே, எனக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும்" என்று மாத்திரமே என்னால் கூவ முடியும் (சங்கீதம் 71:12).

## யார்?

"யார்?" என்பது நாம் கேட்கின்ற மூன்றாவது கேள்வியாக உள்ளது: இந்த வேண்டுகோள் யாருக்கு ஏற்படுத்தப்பட்டது? வேதவசனப் பகுதியானது "என் ஜனங்கள்" என்பவர்களுக்கு உரைக்கப்பட்டுள்ளது. இது கிறிஸ்தவர்களை முதன்மையாகக் குறிக்கிறது என்று பெரும்பான்மை யானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். பேதுரு கிறிஸ்தவர்களுக்கு எழுதிய போது, "நீங்களோ ... அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் (1 பேதுரு 2:9, 10).

ஒரு காலத்தில் ரோமாபுரியில் பல கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருந்தனர் (ரோமர் 16), மற்றும் அவர்கள் அங்கே ‘‘அநேக வருஷமாய்’’ வாழ்ந்திருந்தனர் (ரோமர் 15:23). ரோமாபுரியின் செல்வாக்கு உலகத்தில் ஊடுருவியிருந்தபடியால், ‘‘வெளியே வருதல்’’ என்பதற்கான கட்டளையானது அந்த நகரத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் எங்குமுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களுக்குமானதாக இருந்தது.

"என் ஜனங்கள்" என்ற சொற்றொடர், ரோமாபுரியில் இருந்தவர்கள் - கொரிந்துவில் இருந்தவர்கள் பற்றித் தேவன் பவுலிடத்தில் ‘‘இந்தப் பட்டணத்தில் எனக்கு அனேக ஜனங்கள் உண்டு’’ என்று கூறியபோது இருந்தது போலவே (நடபடிகள் 18:10)[21] - சுவிசேஷத்திற்குத் திறந்த வாசலைக் கொண்டிருந்தனர் என்று அர்த்தப்படுவதாகவும் விளக்கப் பட்டுள்ளது. மனிதர்களின் இருதயங்களை அறிந்திருக்கின்றவரான தேவன், கொரிந்துவில் நேர்மையும் நன்மையுமான இருதயங்களை உடையவர்கள் இருந்தனர் என்று அறிந்திருந்தார் (லூக்கா 8:15). ஆகையால் பவுல் அங்கு தொடர்ந்து பிரசங்கித்தால், பலர் இரட்சிக்கப்படுவர் என்று அவர் (தேவன்) அறிந்திருந்தார். மாபெரும் இருதய ஆய்வாளர் (1 நாளாகமம் 28:9), ரோமாபுரியில் ஒருசிலர் அடையப்படக்கூடியவர்களாய் இருந்தனர் என்று அறிந்திருக்கவும் - அவரது வசனங்கள் அவர்களுக்கு அழைப்பாய் இருக்க நோக்கங்கொண்டிருக்கவும் - சாத்தியக்கூறு உள்ளது.[22]

இந்த விளக்கத்தை நான் முதன்முதலாக வாசித்தபோது, இவ்வசனங்கள் பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்கும் ஒரு இரட்டை அழைப்பைக் கொண்டிருக்க முடியும் என்பது பற்றி நான் ஐயப்பாடு கொண்டிருந்தேன். பின்பு நான் ஒரு இரண்டாவது சிந்தையைக் கொண்டேன்: நான் இப்படிப்பட்ட அழைப்பை தொடர்ந்து விடுக்கின்றேன். பெரும்பாலான பிரசங்கங்களின் முடிவில், நான் கிறிஸ்தவர்களைத் தேவபக்தியுள்ள வாழ்வு நடத்தும்படி (மற்றும் அவசியம் இருந்தால் கர்த்தரிடமாய் மீளக்கட்டுவிக்கப்படும்படி) உற்சாகப்படுத்துகின்றேன். அதே வேளையில், கிறிஸ்தவரல்லாதவர்கள், விசுவாசம், மனந்திரும்புதல், மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின்மூலம் கிறிஸ்தவர்களாகும்படி (ரோமர் 10:9, 10; மாற்கு 16:15, 16; நடபடிகள் 2:37, 38) உற்சாகப்படுத்துகின்றேன். வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவரல்லாதவர்களையும் உலகத்தை விட்டு "வெளியே வந்து" பின்பு

உலகத்திலிருந்து வெளியே இருக்கும்படி நான் வேண்டுகின்றேன்.

நீங்கள் யாராக இருப்பினும், உங்கள் ஆவிக்குரிய நிலை என்னவாக இருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் 18:4ம் வசனமானது உங்களிடத்தில் பேசுகிறது. ''வெளியே வாருங்கள்!'' என்று தேவன் உங்களுக்கு கூறுகிறார்.

## எப்போது?

''அவர்கள் எப்போது வெளியே வரவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்?" என்பது கடைசிக் கேள்வியாக உள்ளது. "உடனடியாக! இப்போதே!" என்பது தெளிவான பதிலாகும்.

18ம் அதிகாரத்தில் உடனடித்தன்மையின் கருத்துணர்வொன்று வியாபித்துள்ளது. லியோன் மோரிஸ் என்பவர், குறைந்தபட்சம், சில வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் நூற்றாண்டு வாசகர்கள் "சூழ்நிலையின் அவசரத்தன்மையைப் புரிந்துணர்ந்திருக்கவில்லை" என்று கருத்துத் தெரிவித்தார்[23] - மற்றும் அவர் அனேகமாக, சரியாகக் கூறியிருக்கலாம். வாதைகள் "ஒரே நாளில்" (வசனம் 8), "ஒரே நாழிகையில்" (வசனம் 10) வரவிருந்தன. பேரழிவு தாக்கும்போது ஆயத்தப்பட நேரம் இருக்காது. "இப்போதே" ஆயத்தப்படுவதற்கான நேரமாக உள்ளது.

''ஒரு நாள்'' மற்றும் ''ஒரு நாழிகை'' என்ற வார்த்தைகள் நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்படக் கூடாது - இந்தச் சொற்றொடர்கள் ரோமாபுரி அழிவதன் திடீர்த்தன்மையை மாத்திரம் சுட்டிக்காண்பிக்கின்றன - ஆனால் வாழ்வைப் பற்றி நன்கு அறிந்துள்ளவர்கள், துன்பமானது மிக விரைவில் வரக்கூடும் என்பதை அறிந்துள்ளனர். பேரழிவு ஒரே நாளில் வரக்கூடுமா?[24] இந்தக் கேள்வியை, வெள்ளப்பெருக்கின் காரணமாகத் தங்கள் உடமைகள் யாவற்றையும் இழந்த மத்திய சீனாவின் மக்களிடத்தில் கேட்டுப்பாருங்கள். பேரழிவு ஒரு நாழிகையில் வரக்கூடுமா? சமீபத்தில் வங்கக்கடலில் சுனாமிப் பேரலையினால் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் மனிதர்களிடத்தில் இதைக் கேட்டுப்பாருங்கள். பேரழிவு ஒரு நிமிடத்தில் வரக்கூடுமா? பூமியதிர்ச்சியால் தங்கள் வீடுகளை இழந்து வாழ்வு சீரழிந்த நிலையில் இருக்கும் இந்தோனேஷிய மக்களிடத்தில் இவ்வாறு கேட்டுப்பாருங்கள். பெரும் விபத்தானது ஒரு விநாடி நேரத்திலும் வரக்கூடும். சமீபத்தில் ஒரு உள்ளூர் செய்தியறிவிப்பில் பின்வருமாறு கூறப்பட்டது: ஒரு லாரி டிரைவர், சிகரெட் பற்ற வைப்பதற்காக ''ஒரு வினாடி நேரம்'' மாத்திரம் தனது கனத்தைத் திசைதிருப்பிய வேளையில், லாரியானது சாலையில் இருந்து திசைதப்பிச் சென்று, சாலையின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு கார்களின்மீது மோதி, நெடுஞ்சாலைக் காவலர் ஒருவரைக் கொன்றது.

பின்வருவது உண்மையென்று நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள்: பெருந்துன்பமானது எந்த வேளையிலும் எந்த இடத்திலும் தாக்கக்கூடும். "உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலம் தோன்றிப் பின்பு

*தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" (யாக்கோபு 4:14). உங்களை அமைதியற்றுப்போகச்செய்ய வேண்டும் என்பதற்காக அல்ல, ஆனால் நீங்கள் - இப்போதே - ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் இதை உங்களுக்கு நினைவூட்டுகின்றேன். "இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம்; இப்பொழுதே இரட்சணிய நாள்" (2 கொரிந்தியர் 6:2). "... இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் ... உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (எபிரெயர் 4:7). நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தால், அதை இப்போதே பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருந்தும் தவறு செய்துகொண்டிருந்து, மீளக்கட்டுவிக்கப்பட வேண்டியிருந்தால், அதை இப்போதே செய்யுங்கள். நீங்கள் ஆயத்தமாய் இருந்தால், உங்களால் "வருங்காலத்தைப் பற்றி மகிழ" முடியும் (நீதிமொழிகள் 31:25ஐக் காணவும்).*

## *முடிவுரை*

*இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு பேசப்பட்ட தேவனுடைய வார்த்தையானது அவைகள் முதன் முதலாகப் பேசப்பட்டபோது இருந்ததைப் போன்றே இன்றைக்கும் ஏற்புடையவைகளாக - மற்றும் - அவசியமானவைகளாக உள்ளன: "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது" (வசனங்கள் 4, 5அ). முதல் நூற்றாண்டில் ரோமாபுரியானது கிறிஸ்தவர்களை மயக்கி இழுக்க முயற்சி செய்தது, மற்றும் இன்றைய நாட்களில் உலகம் நம்மை மோசம்போக்க முயற்சி செய்கிறது,*

> *பொன் வெள்ளியுமோ பெரும் பேர்புகழோ,*
> *பண ஆசையும் வீணல்லவோ;*
> *பரலோகத்தின் செல்வமே என் அரும் இயேசுவே:*
> *போதும் எனக்கு நீரே.*[25]

---

# போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*Proclaiming the New Testament: The Book of Revelation, என்ற மெரில் C. டென்னீ என்பவரின் புத்தகத்தில் 18ம் அதிகாரம் பற்றிய பாடத்திற்கு "கடைசி அழைப்பு" என்று தலைப்பிடப்பட்டு, அது, "வெளியே வருதல்" என்ற வேண்டுகோளின் மீது மையங்கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. "'பாபிலோனின்' வீழ்ச்சி" என்று தலைப்பிடப்பட்ட ஒரு பாடத்தில், டாம்மி சவுத் என்பவர், " 'பாபிலோனின்' வீழ்ச்சியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்கள் யாவை?" என்ற ஒரு பிரிவை உள்ளடக்கினார். அவரது*

*கருத்துக்களில் பல, ''வெளியே வருதல்'' என்ற ஆய்வுக்கருத்தையே எடுத்துரைக்கின்றன.*

*குறிப்புகள்*

[1]Robert Mounce, *The Book of Revelation,* The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 324. [2]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 210. [3]Much of this paragraph is paraphrased from Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 266. [4]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 208. [5]William Barclay, *The Revelation of John,* vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 152. [6]Ibid. [7]Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 93. [8]*"பரிசுத்தவான்கள்" என்ற குறிப்புப் பெயர் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பதிமூன்று முறைகள் காணப்படுகிறது.* [9]*"பரிசுத்தவான்" என்ற வார்த்தையைப் பற்றி, "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்" என்ற பாடத்தின் அடிக்குறிப்புகளில் காணவும்.* [10]*"சபை" என்ற வார்த்தை ekklesia என்ற கிரேக்க கூட்டு வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இந்த கிரேக்க வார்த்தை "அழைத்தல்"* (*kaleo*) *என்பதற்கான வார்த்தையை "வெளியே" அல்லது "இல் இருந்து வெளியே" என்று அர்த்தப்படும் முன்னிடைச் சொல்லுடன்* (*ek*) *இணைத்துப் பெறப்பட்டுள்ளது.*

[11]Tenney, 91-92. [12]Ibid., 93. [13]Cecil F. Alexander, "Jesus Calls Us," *Songs of Faith and Praise*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1996). [14]This sentence was based on a phrase used by Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 616. [15]*இந்த வேண்டுகோளை எரேமியா 51:6, 45உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [16]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation,* The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 166. [17]Mounce, 324. [18]Morris, 209. [19]Ibid., 210. [20]Hendriksen, 213.

[21]*சில எழுத்தாளர்கள், தேவன் புறஜாதியார்கள் ("என் ஜனங்களல்லாதவர்கள்") ஒரு நாளில் "என் ஜனங்கள்" என்று அழைக்கப்படுவார்கள் என்று கூறிய ஓசியா 2:23ஐக் குறிப்பிடுகின்றனர் (இது ரோமர் 9:25, 26 மற்றும் 1 பேதுரு 2:9, 10 ஆகிய வசனங்களில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது).* [22]*நடபடிகள் 18:10ல் தேவனுடைய "மக்கள்" என்பதற்கான அவரது குறிப்பு, அந்த மக்கள் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை இன்றியே இரட்சிக்கப்பட்டிருப்பார்கள் என்று அர்த்தப்படவில்லை. அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு, இன்னமும் கேள்விப்பட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தது (நடபடிகள் 18:8). அவ்வாறே, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் "என் ஜனங்கள்" என்பது கிறிஸ்தவர்களாக சாத்தியக் கூறுள்ளவர்களையும் உள்ளடக்கினால், இவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு கர்த்தருக்கு இன்னமும் பதில்செயல் செய்ய வேண்டியிருந்தது.* [23]Morris, 210. [24]*உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குத் தொடர்புடைய விவரிப்புகளைப் பயன்படுத்தவும். அமெரிக்காவில், பங்கு மார்க்கெட் மூழ்குதல்கள் (உதாரணத்திற்கு* "Black Friday," *என்பது) விவரிப்பாகப் பயன்படுத்தப்படலாம்.* [25]Tillit S. Teddlie,

"Heaven Holds All to Me," *Songs of Faith and Praise*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1996).

---

# மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

*1. தேவனுடைய மக்கள் "வெளியேறும்படி" கூறப்பட்ட வேளைகள் பற்றி இப்பாடத்தில் தரப்பட்டு உள்ள உதாரணங்களை மறுகண்ணோட்டமிடவும். மற்ற உதாரணங்களைப் பற்றி நீங்கள் நினைத்து பார்க்க முடியுமா?*

*2. "வெளியே வரும்படியான" கட்டளையானது சில வேளைகளில், தேவனுடைய மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து பௌதீகரீதியான முறையில் வெளியேற வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? இது எப்போதுமே இவ்வாறே அர்த்தப்படுகிறதா?*

*3. 2 கொரிந்தியர் 6:14-7:1ல் நம் ஒவ்வொருவருக்கும் தரப்பட்டுள்ள அறைகூவலைப் பற்றிக் கலந்துரையாடுக.*

*4. இந்தப் பாடம், தேவனுடைய மக்கள் பிரிந்திருந்து தனிதன்மையுடன் இருக்க வேண்டியது பற்றிப் போதிக்கும் பல வசனப்பகுதிகளைப் பட்டியலிடுகிறது. மற்ற சிலவற்றைப் பற்றி நீங்கள் நினைத்துப் பார்க்க முடியுமா?*

*5. உலகம் ஒரு கவர்ச்சியை - நிலைபிறழ்ந்த ஒரு கவர்ச்சியை, ஆனாலும் இன்னமும் ஒரு கவர்ச்சியாக இருக்கும் விஷயத்தை - கொண்டுள்ளது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா?*

*6. "உலகம் கடந்து செல்லுகிறது" என்பதை அறிதலானது சோதனைகளைச் சந்திப்பதில் நமக்கு உதவுகிறதா?*

*7. "என் ஜனங்கள்" என்ற சொற்றொடர் கிறிஸ்தவர்களாய் இருப்பவர்களை மாத்திரம் உள்ளடக்குகிறதா? அல்லது அது (நடபடிகள் 18:10ல் உள்ளதுபோல்) கிறிஸ்தவர்களாவதற்குச் சாத்தியக் கூறுள்ளவர்களையும் உள்ளடக்கக்கூடுமா?*

*8. நாம் சத்தியத்தை அறிந்தபின்பு, எவ்வளவு சீக்கிரத்தில் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்?*

*9. பெருந்துன்பமானது எந்த வேளையிலும் தாக்கக்கூடும் என்பதால், நாம் உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று இந்தப்பாடத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழ்ப்படிதலைத் தள்ளிவைக்கக்கூடாதிருப்பதற்கு நீங்கள் நினைத்துப் பார்க்கக் கூடிய பிற காரணங்கள் யாவை?*